[1981 ஏப்ரல் 1

திருச்சி மாவட்டத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 587—திரு மா. சின்னராசு : மற்றும் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்கா புகளூர் ரயில்வே ஸ்டேஷன் அருகில் பேப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

*வினா எண் 588—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பொதுத்துறையில் நிறுவ உத்தேசித்திருக்கும் செய்தித் தாள் காகித ஆலையை எந்த இடத்தில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது ?

(ஆ) தொழிலில் பின்தங்கிய திருச்சி மாவட்டம், துறையூரில் அந்த ஆலையை நிறுவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு ஆண்டிற்கு 50,000 டன் செய்தித்தாளும், 40,000 டன் எழுதுந் தாளும் உற்பத்தி செய்வதற்காக சுமார் ரூபாய் 180 கோடி செலவில் திருச்சி மாவட்டத்தில் புகளூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது ஆசியாவிலேயே பெரிய திட்டம், முதல் திட்டம். அதை என்னுடைய தொகுதியிலே கொண்டு வருவதற்காக முதற்கண் அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசு தொடங்கிவிட்டதா ? எந்த இடத்தில், எத்தனை ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிற இடம் ஏறக்குறைய 840 ஏக்கர். அதில் திருக்காட்டுத்துறை மற்றும் புஞ்சைப் புள்ளூர் போன்ற கிராமங்களில் இருக்கும் நஞ்சை நிலம், புறம்போக்கு நிலம் ஆகியவற்றை இத் திட்டத்திற்கு மாற்றுவதற்கு அரசு அனுமதி அளித்து நில ஆர்ஜித வேலைகள் நடைபெறுகின்றன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைக்காக எடுக்கப்படுகிற நிலங்களுடைய சொந்தக்காரர்களுடைய பிள்ளைகளுக்கு, அந்தத்

1981 ஏப்ரல் 1]

தொழிற்சாலையில் வேலையில் கொடுக்கப்படுமா ? அடுத்து, இந்தத் தொழிற்சாலைக்கான அடிக்கல் எப்பொழுது நாட்டப்படும் ? அதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் வந்து அடிக்கல் நாட்டுவார்களா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே முழுமையாக நிலங்களை இழக்கிற குடும்பங்களுக்கு, அமைய இருக்கிற அந்தத் தொழிற்சாலையிலே பணிகள் கிட்டுகிற விதத்திலே இந்த அரசு பார்த்துக் கொள்ளும். ஆசியாவிலேயே பெரிய தொழிற்சாலையாக அமைய இருக்கிற அந்தத் தொழிற்சாலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக வந்து அடிக்கல் நாட்டுவார்கள்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த வினா கொடுத்து நீண்ட நாட்களாகி விட்டது. இப்பொழுது கரூர் பகுதிக்கு ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு எந்தவிதமான சிறு தொழிற்சாலையும்கூட கிடையாது என்ற காரணத்தால், துறையூருக்கு அருகிலே எரையூர் சர்க்கரை ஆலையும், காட்டூர் சர்க்கரை ஆலையும் இருக்கிற காரணத்தாலும், நிறைய கரும்புச் சக்கைகள் கிடைப்பதாலும் மேலும் பச்சைமலை, கொல்லி மலையிலே மூங்கில்கள் அதிகமாகக் கிடைப்பதாலே, இந்தக் காகிதத் தொழிற்சாலையைத் துறையூரிலே நிறுவுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது வேறு ஏதாவது ஒரு ஆலையைத் தொடங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தேர்வு செய்யப்படுவது. அங்கே கிடைக்கும் கச்சாப் பொருள், தண்ணீர், நிலம் ஆகிய வசதிகளைப் பொருத்துத்தான் உள்ளது, இந்த அடிப்படையாக வைத்து கரூர் தாலுகாவில் உள்ள புகளூரில் அமைக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திருச்சி மாவட்டத்தில் உள்ள கரூர் தாலூக்காவில் புகளூரிலும், பெரம்பலூரில் எரையூர் சர்க்கரை ஆலையும், லால்குடியில் கோத்தாரி சர்க்கரை ஆலையும், திருச்சி தாலுக்காவில் பேட்டைவாய்த்தாலையில் காவேரி சர்க்கரை ஆலையும் இருக்கின்றன. இந்த 4 சர்க்கரை ஆலைகளுக்கும் மையமாக இருக்கின்ற குளித்தலையிலே இந்தக் காகிதத்

தொழிற்சாலையை அரசு அமைக்க முன் வருமா? அதோடு இதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. அங்கே புஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. இதற்காக நஞ்சை நிலங்களை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தக் காரணங்களினால் அங்கே அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 180 கோடி அளவுக்கு மதிப்பீடு இருக்கின்ற காரணத்தாலும், ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தாலும், அந்தத் தொழிற்சாலையை என்னுடைய தொகுதியிலேயே கூட துவங்கினால் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஆனால் மத்தியில் இருந்து ஒரு குழு வந்து ஆய்வு செய்து புகளூரில் அமைக்க வேண்டும் என்று அறிவித்தாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூர் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இந்தப் பேப்பர் நிறுவனப் பணி ஆரம்பம் ஆகிவிட்டதா? அதனுடைய எம்.டி. யாக யாரைப் போட்டிருக்கிறார்கள் எந்த அடிப்படையில் போட்டு இருக்கிறார்கள். 'சிம்கோ மீட்டர்' விசுவநாதனை அதில் எம்.டி. யாகப் போடப்பட்டிருப்பது உண்மையா என்று தகவல் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதிக்கு ஏற்கனவே நான் பதில் சொல்லிவிட்டேன். இரண்டாவது பகுதிக்கு, எம்.டி. யாக விஸ்வநாதன் நியமிக்கப்படவில்லை.

சேலம் மாவட்டத்திலுள்ள பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள்

*வினா எண் 589—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலுள்ள, சேர்வராயன் மலை, ஏற்காடு, கொல்லிமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பல்நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் (LAMPS) நிர்வாகத்தைச் சீரமைக்கவும் அவற்றின் மூலம் அரிசன மக்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS